# மாகாணக்கல்வித் திணைக்களம்
## வடக்கு மாகாணம்
மூன்றாம் தவணை - 2025

| | | | | |
|---|---|---|---|---|
| கத்தோலிக்க திருமறை<br>Catholicism | Two Hours<br>Gr - 09 | | T | I,II |

**கவனிக்க**

(1) எல்லா வினாக்களுக்கும் விடை எழுதுக.

(2) 1 தொடக்கம் 20 வரையான வினாக்கள் ஒவ்வொன்றிலும் (1), (2), (3), (4) என இலக்கமிடப்பட்ட விடைகளில் சரியான அல்லது மிகப் பொருத்தமான விடையைத் தெரிவு செய்க.

**பகுதி - 1**

1. திருப்பாடல் நூலின் ஆசிரியராக ஏற்றுக்கொள்ளப்படுபவர் யார்?
   1. சாலமோன் அரசன் 2. தானியேல் 3. செக்கரியா 4. தாவீது அரசன்.

2. நீதித்தலைவர்கள் வாழ்ந்த காலப்பகுதி எது?
   1.கி.மு.1000 - கி.மு.1020 2. கி.மு.1210 - கி.மு.1030
   3.கி.மு.1050 - கி.மு.1200 4. கி.மு.1200 - கி.மு.1050

3. நோவாவின் பிள்ளைகள்
   1. காயின், ஆபேல் 2. ஏசா, யாக்கோப்பு 3. சேம், காம், எப்பெத்து 4. ஈசாக், யாக்கோப்பு

4. ஐந்து கூழாங்கற்களும், கவணும் மட்டும் கொண்டு சென்று பெலிஸ்தியரைத் தோற்கடித்தவர்
   1. மோசே 2. யாக்கோபு 3. தாவீது 4. சவுல்

5. காயின் தன் சகோதரனான ஆபேலை கொலை செய்யக் காரணமான பாவம்
   1. பொறாமை 2. விட்டுக்கொடாமை 3. எரிச்சல் 4. சலிப்பு

6. தற்கொலை எத்தனையாம் கட்டளைக்கு எதிரான பாவம்?
   1. 3ம் கட்டளை 2. 4ம் கட்டளை 3. 5ம் கட்டளை 4. 6ம் கட்டளை

7. விண்ணை நோக்கி கூக்குரலிடும் பாவம்
   1. அகங்காரம் 2. பேராசை 3. சோம்பல் 4. கோலை செய்தல்

8. ஏரோது அந்திப்பாஸ் செய்த பாவத்தை சுட்டிக்காட்டியவர்
   1. இயேசு 2. பேதுரு 3. யோவான் 4. திருமுழுக்கு யோவான்

Past Papers Wiki

9. இறையாட்சியின் நற்செய்தி என அழைக்கப்படும் நற்செய்தி
   1. புனித மாற்கு 2. புனித மத்தேயு 3. புனித லூக்கா 4. புனித யோவான்

10. சவுலையும், தாவீதையும் அரசர்களாக திருப்பொழிவு செய்த நீதித்தலைவர் யார்?
   1. யோசுவா 2. சாமுவேல் 3. ஈசாயி 4. கிதியோன்

11. தலையாய பாவங்கள் எத்தனை?
   1. 5 2. 8 3. 7 4. 12

12. புனித டொமினிக் சாவியோவின் திருநாள் எப்போது கொண்டாடப்படும்?
   1. தை 15 2. ஆவணி 30 3. பங்குனி 10 4. மார்கழி 8

13. ஜெருசலேம் தேவாலயத்தைக் கட்டியவர்.
   1. தாவீது 2. சவுல் 3. சாலமோன் 4. எஸ்ரா

14. திருப்பலியில் திருப்பாடல் பயன்படுத்தப்படும் சந்தர்ப்பம்
   1. இறைவார்த்தைக்கு பதிலுரை 2. புகழுரை 3. முன்னுரை 4. நற்கருணை மன்றாட்டு

15. ஞானநூல் தொகுதியில் அடங்கியுள்ள நூல்களின் எண்ணிக்கை?
   1. 5 2. 7 3. 8 4. 16

16. கற்புநெறி தவறுகின்றவன்
   1. பொய்யன் 2. மதிகேடன் 3. கெட்டவன் 4. குடிகாரன்

17. மனம் வருந்திமனம் மாறுகிறவர் மட்டில் இறைவன் மிகுந்த மகிழ்ச்சி அடைகின்றார் என்பதை எடுத்துக்கூறும் உவமை
   1. நல்லசமாரியன் உவமை 2. வலை உவமை
   3. கடுகு விதை உவமை 4. காணாமற்போன மகன் உவமை

18. நமது பிறப்பிலேயே நமக்கு உரிமையாகும் பாவம்
   1. கன்ம பாவம் 2. அற்ப பாவம் 3. சென்ம பாவம் 4. சாவான பாவம்

19. இறைவன் எமக்குத் தந்த மாபெரும் கொடை
   1. உலக செல்வம் 2. வாழ்வு 3. வசதிவாய்ப்பு 4. பாதுகாப்பு

20. நோயிற்பூசுதல் அவசியம் பற்றிக்கூறும் திருமுகம்.
   1. தீமொத்தேயு 2. யூதா 3. யோவான் 4. யாக்கோபு

(20 x 2 = 40 புள்ளிகள்)

## பகுதி - 2

**முதலாம் வினாவிற்கும் ஏனைய 4 வினாக்களுக்குமாக 5 வினாக்களுக்கு மட்டும் விடை தருக.**

01. 1. நீதித்தலைவர்கள் இருவரின் பெயர்களைத் தருக?
    2. ஐந்நூல்களுள் இரண்டின் பெயரைத் தருக?
    3. பெரிய இறைவாக்கினருள் இருவரின் பெயர்களைத் தருக?
    4. புனித மாற்கு நற்செய்தி எழுதப்பட்ட காலம், மற்றும் அதன் வேறு பெயரையும் தருக?
    5. கன்ம பாவத்தின் இரு வகைகளும் எவை?
    6. புகுமுக அருளடையாளங்களுள் இரண்டினைத் தருக?
    7. பாவத்திற்கு கிடைக்கும் இரு வகையான தண்டனைகளும் எவை?
    8. எமது உடலுக்கு நோயை ஏற்படுத்தும் தவறான பழக்கவழக்கங்கள் எவை?
    9. யோவான் நற்செய்தி குறிப்பிடும் "நானே" என்ற சொற்பதங்கள் இரண்டு தருக?
    10. நோயிற்பூசுதல் வழியாக கிடைக்கும் வரங்கள் 2 தருக?

(10x2=20 புள்ளிகள்)

02. 1. இறைவன் ஏவாளுக்கு கொடுத்த தண்டனைகள் இரண்டு தருக?
    2. காயீன் ஆபேலைக் கொன்றமைக்கான காரணம் யாது?
    3. தற்கால சமுதாயத்தில் மலிந்து கிடக்கும் பாவச்செயல்கள் 5 தருக?

(2+3+5=10 புள்ளிகள்)

03. 1. காணாமற்போன மகன் உவமை திருவிவிலியத்தில் எப்பகுதியில் காணப்படுகின்றது?
    2. காணாமற்போன மகன் திருந்தி வந்தபோது அவனது தந்தை அவனுக்கு செய்த விடயங்கள் எவை?
    3. காணாமற்போன திராக்மா உவமையை சுருக்கமாக எழுதுக?

(2+3+5=10 புள்ளிகள்)

04. 1. நோயிற் பூசுதல் அருளடையாளத்தை பெற்றுக்கொள்ளவேண்டியவர்கள் இருவரைக் குறிப்பிடுக?
    2. 5ம் கட்டளைக்கு எதிரான பாவங்கள் 3 தருக?
    3. தூய்மையான வாழ்வு வாழ நீர் செய்யக்கூடிய செயல்கள் 5 தருக?

(2+3+5=10 புள்ளிகள்)

05. 1. புனித மரியகொறற்றி இறக்கும்போது அவருடைய வயது எத்தனை?
    2. புனித அக்னஸ் எவ்வாறு இறந்தார்?
    3. புனித டொமினிக் சாவியோ பற்றி 5 வசனம் தருக?

(2+3+5=10 புள்ளிகள்)

06. 1. செபம் என்றால் என்ன?
    2. திருவிவிலியத்தில் உள்ள புகழ்பாக்கள் 3 தருக?
    3. "கிறிஸ்தவர்களின் ஆன்மீக வாழ்வுக்கு செபம் முக்கியமானது." விளக்குக?

(2+3+5=10 புள்ளிகள்)

07. விரும்பிய இரண்டிற்கு சிறுகுறிப்பு எழுதுக?
    1. ஒப்புரவு அருளடையாளம்
    2. புனித யோசவ்வாஸ்
    3. நோவாவும் வெள்ளப்பெருக்கும்
    4. மனித வாழ்வைப் பாதுகாப்போம்.

(5x2 = 10 புள்ளிகள்)

PAST PAPERS WIKI
WWW.PastPapers.WiKi
Downloaded From Past Papers WiKi - Sri Lanka's Largest Past Papers Library